7th March 1968]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி இடத்தைப் பற்றியிருந்த தால் பதிலும் இடத்தைப் பற்றியிருக்கிறது. ஏற்கெனவே ஒரு இடத்தை எடுத்து இருந்தோம். வழக்கறிஞர்கள் சங்கமும், பொது மக்களும் அது வேண்டாமென்றும் வேறு இடத்தை தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். அதன்படி இப்போது வேறு இடம் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கு ஒப்புதல் கேட்டு உயர்நீதி மன்றத்திற்கு எழுதப் பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இப்போது சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட இடம் மிகவும் பொருத்தமான இடம் என்று எல்லோராலும் வரவேற்கப்பட்டது. இந்த இடத்தில் கட்டிடம் சீக்கிரமாக அமைக்க வேண்டும். ஏனென்றால் தற்போதைய முன்சீப் கோர்ட் கட்டிடத்தை ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்காக கொடுக்கவேண்டு மென்று கேட்கப்படுகிறது. அதை முன்னிட்டு சீக்கிரத்தில் இந்த கட்டி டத்தை கட்ட அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மருத்துவ விடுதிக்கு தேவை என்பதை அரசாங்கம் ஒப்புக் கொள்கிறது. ஆகவே உயர்நீதி மன்றத் திற்கு எழுதி ஒப்புதல் பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

Rice Mills.

*** 204.** *Q.*—THIRU N. R. THIAGARAJAN : **Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—**

(*a*) the stage at which the erection of 8 large Modern Rice Mills in Tamilnad now stands ;

(*b*) when they will start functioning ;

(*c*) the estimated expenditure ; and

(*d*) the number of bags of paddy per day that can be hulled in each of the said new mills ?

அரிசி ஆலைகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சட்ட-கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் 8 பெரிய நவீன அரிசி ஆலைகள் நிர்மாணிக்க இருந்த செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது ?

(இ) எப்பொழுது இந்த ஆலைகள் இயங்கும் ?

(உ) எவ்வளவு பணம் செலவாகும் ?

(எ) எத்தனை மூட்டை நெல் மேற்படி புது மில்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மில்லில் அறைக்கலாம் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) கூட்டுறவுத் துறையில் 13 நவீன அரிசி ஆலைகள் விரைவில் ஏற்படுத்தப்படும்.

(இ) 1968-69-ம் ஆண்டில் இந்த ஆலைகள் நிறுவப்படலாம்.

(உ) சுமார் ரூ. 111 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது.

(எ) ஒவ்வொரு ஆலையும் ஒரு மணியில் 2 டன் நெல் அறைக்கும் சக்தியுள்ளதாயிருக்கும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, இந்த ஆலைகள் அமைப்பதற்கு மத்திய சர்க்கார் எவ்வளவு பணம் கொடுத்தது ? எங் கெங்கு அமைக்கயிருக்கிறார்கள் ? ஜில்லா வாரியாக அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதை அமைக்க என்.டி.சி.-யி லிருந்து முழுத் தொகையையும் ஏற்றுக் கொள்கிறார்கள். கிட்டத்தட்ட 111 லட்சம் ரூபாய் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இப்போது ரூ. 83½ லட்சம் அவர்கள் கொடுப்பதாக ஒத்துக் கொண்டு விட்டார்கள். நெல் உற்பத்தி அதிகமாகயிருக்கும் மாவட்டங்களுக்கு மாத்திரம் முதலிடம் கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்த இடங்கள் என்பது இன்னும் முடிவாகவில்லை.

Food Poisoning

*** 205. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether 14 persons were admitted at Srivilliputhur hospital in an unconscious state due to consumption of poisoned food ?**

நச்சுணவு.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

ஸ்ரீவில்லிபுத்தூரில் நச்சுணவு சாப்பிட்டு சமீபத்தில் மகாளய அமாவாசையன்று 14 பேர் சுய நினைவிழந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, ஏதோ கண் டதைச் சாப்பிட்டு இத்தகைய சம்பவங்கள் அடிக்கடி நடக்கின்றன. சமீபத் தில் கூட பூந்தமல்லியில் இத்தகைய சம்பவம் ஏற்பட்டு 100 பேருக்கு மேல் பாதிக்கப்பட்டார்கள். ஆகவே இதற்கெல்லாம் என்ன அடிப்படை யான காரணம் என்று விசாரித்து அதற்குரிய தடுப்பு முறைகளை கையாண்டு தடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு காரணம் இருக்கிறது. வில்லிபுத்தூரில் கேழ்வரகு தோசை சாப்பிட்டதால் ஏற்பட்டது. அந்த கேழ்வரகு "non-poison" என்று சொல்லப்படுகிறது. ஆங்காங்கு உள்ள நிலைமைக்குத் தகுந்தபடி நட வடிக்கை எடுக்கப்பட்டது. நேற்றிரவுகூட பிரியாணி சாப்பிட்டு பலர் பாதிக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : கேழ்வரகு அல்ல. அதற்கு வரகு என்று பெயர். அந்த வரகை நீண்ட நாட்களுக்கு வைத்திருந்தால் அது விஷத் தன்மை உடையதாகிவிடும் என்று சொல்லப்படுகிறது. கிராமங் களில் இதை 5 வருடம், 10 வருடம் என்று வைத்திருக்கிறார்கள். கேழ் வரகு என்று குறிப்பிட்டிருந்தால் அதை வரகு என்று திருத்திக் கொள் வார்களா ? வரகு சாப்பிடக்கூடாது என்று உத்தரவு போடப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இங்கு கேழ்வரகு என்று தான் இருக்கிறது.

Dharamangalam Hospital

*** 206. *Q.*—THIRU N. R. THIAGARAJAN :—Will the Hon. the Minister for Public Health be pleased to state :**

(*a*) whether the hospital in Dharamangalam, Salem District is functioning without a Doctor ; and

(*b*) if so, when a doctor will be appointed there ?